# கேரளப் பாடநூல்

# தமிழ்

## வகுப்பு VII

## ஆசிரியர் பனுவல்

**Tamil**
**Standard VII (AT)**
**Teacher Text**

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
**2024**

.

# 1 புத்தம் புது பூமி

**அலகு அறிமுகம்**

இந்த உலகம் இயற்கை அரணால் சுற்றப்பட்டுள்ளது. இயற்கையின் அரவணைப்பில்தான் விலங்குகளும் மனிதர்களும் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நமக்கு உண்ண உணவும், குடிக்கத் தண்ணீரும், சுவாசிக்கக் காற்றையும் தந்து பாதுகாப்பது இந்த இயற்கையே. இயற்கையினைப் பாதுகாத்து அதற்கு இசைவாக வாழ வேண்டும் என்ற விழிப்புணர்வை மாணவர்களிடம் ஏற்படுத்துவதே இவ்வலகின் நோக்கமாகும்.

சுற்றுப்புறம் எவ்வாறு மாசடைகிறது என்பதைக் கவிதை, கட்டுரை, கதை என்ற மொழிக்கூறுகளின் வழி அறிய இவ்வலகு உதவுகிறது. கிராமங்கள் நகரங்களாக மாறும்போது ஏற்படும் பிரச்சனைகளை அறியவும், தண்ணீர்த் தட்டுப்பாடு, காற்று மாசடைதல் போன்றவற்றை அறிந்துகொண்டு அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகளையும் இவ்வலகு எடுத்துரைக்கிறது. வரும் தலைமுறையினர் நலமுற வாழ நாம் செய்ய வேண்டியவற்றைக் கலந்துரையாடவும் இயற்கை பாதுகாப்புச் செயல்களில் ஈடுபடவும் வாசிப்பு, எழுத்து என்ற செயல்களிலிருந்து மொழியை இரசிக்கவும் ஆழமாகப் புரிந்துகொள்ளவும் இவ்வலகு துணைநிற்கிறது.

இந்த அலகைக் கற்பிக்கத் தேவையான காலம்

24 பிரிவேளைகள்

| கரு | துணைக்கரு | இலக்கிய வடிவங்கள் | கற்றல் நோக்குகள் | | | மொழிக் கூறுகள் | மொழி வெளியீட்டு வடிவங்கள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கருத்துகள் | திறன்கள் | மனப் பான்மைகள் | | | |
| சுற்றுச்சூழல்<br><br>புத்தம் புது பூமி | சுற்றுப்புறமும் மாசடைதலும் | கவிதை<br>கட்டுரை<br>கதை | சுற்றுச்சூழல் மாசடைவதால் பல்வேறு தீங்குகள் உருவாகின்றன என்பதைப் புரிந்து கொள்ளுதல் | • மெட்டமைத்துப் பாடும் திறன்<br>• கருத்துணர்ந்து வாசிக்கும் திறன்<br>• நடித்துக்காட்டும் திறன்<br>• முத்திரை வாக்கியம் எழுதும் திறன்<br>• சுவரொட்டி தயாரிக்கும் திறன் | சுற்றுச்சூழல் மாசடைவதற்கான காரணங்களை அறிதல் | எதுகை, மோனை சொற்களைக் கண்டறிதல்<br><br>பிரித்தெழுதுதல் | குரல் ஏற்றத்தாழ்வுடன் பாடுதல்<br><br>முத்திரை வாக்கியங்கள் தயாரித்தல்<br><br>குறிப்பு தயாரித்தல்<br><br>நடித்துக்காட்டுதல்<br><br>சுவரொட்டி தயாரித்தல் | தரநிர்ணயக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பிடுதல் |
| | நகர மயமாதலும் தண்ணீர் தட்டுப்பாடும் | ஹைக்கூ<br>கவிதை<br>கட்டுரை | நகரமயமாதலின் காரணமாகச் சுற்றுச்சூழல் மாசடைவதுடன் தண்ணீர் தட்டுப்பாடும் ஏற்படுகிறது என்பதை அறிந்து கொள்ளுதல் | • பாடப்பகுதியை வாசித்து விடை காணும் திறன்<br>• கோரிக்கை மனு எழுதும் திறன்<br>• குறிப்பு எழுதும் திறன் | தண்ணீர் தட்டுப்பாட்டிற்கான காரணங்களை அறிந்து அதனைச் சரி செய்வதற்கான முன்னேற்பாடு செய்தல் | பொருள் கண்டறிதல் ஹைக்கூ எழுதுதல் | விடை காணுதல் கோரிக்கை மனு எழுதுதல் குறிப்பு எழுதுதல். | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சுற்றுச்சூழல் பாதுகாப்பு | கவிதை கதை விளக்கக் குறிப்பு | சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளுதல் | • இராக, தாளத்துடன் பாடுதல்<br>• ஒரு மொழி வெளியீட்டு வடிவத்தை வெறொரு மொழி வடிவமாக எழுதுதல்<br>• முத்திரை வாக்கியம் எழுதும் திறன் | சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது நமது கடமை என்று உணர்தல் | அடுக்குத் தொடரைக் கண்டறிந்து எழுதுதல் | இராக, தாளத்துடன் பாடுதல்<br><br>கவிதையை உரைநடையாக எழுதுதல்<br><br>முத்திரை வாக்கியம் எழுதுதல்<br><br>வினாநிரல் தயாரித்தல்<br><br>சொற்பொழிவுக் குறிப்பு தயாரித்தல் | |

## கற்றல் இலக்குகள்

- குரல் ஏற்றத்தாழ்வுடன் மெட்டமைத்துப் பாடுகிறார்கள்.
- எதுகை, மோனை சொற்களைக் கண்டறிகிறார்கள்.
- முத்திரை வாக்கியங்கள் தயாரிக்கிறார்கள்.
- குறிப்பு தயாரிக்கிறார்கள்.
- மரங்களினால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கலந்துரையாடுகிறார்கள்.
- சுவரொட்டி தயாரிக்கிறார்கள்.
- வாசித்து வினாக்களுக்கு விடை காண்கிறார்கள்.
- சொற்களைப் பிரித்து எழுதுகிறார்கள்.
- கோரிக்கை மனு எழுதுகிறார்கள்.
- குறிப்பு எழுதுகிறார்கள்.
- அகர முதலியைப் பயன்படுத்திப் பொருள் கண்டுபிடிக்கிறார்கள்.
- வினாநிரல் தயாரிக்கிறார்கள்.
- சொற்பொழிவுக் குறிப்பு தயாரிக்கிறார்கள்.

## கற்றல் துணைக் கருவிகள்

- பாடநூல்.
- ஆசிரியர் பனுவல்.
- இணையதளத்தின் வழி நெகிழியின் பயன்பாடு காண்பித்தல்.
- இயற்கையின் படங்கள்.
- முத்திரை வாக்கியம் எழுதிய சார்ட்.

**ஆய்வுத்தச் செயல்பாடு**

இயற்கையான அல்லது செயற்கையான ஒரு செடியின் இலையையோ அல்லது பூவையோ அல்லது இரண்டையுமோ காண்பித்து இதில் எது அழகு? எனக் கேட்டு, கலந்துரையாடல் நடத்தலாம். அதிலிருந்து சில கேள்விகளைக் கேட்கலாம்.

- இவற்றில் எது அழகானது?
- இயற்கையான இலை எது?
- இயற்கையான பொருளுக்கும் செயற்கையான பொருளுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

இயற்கையின் அழகு, பயன்பாடு, தேவை, முக்கியத்துவம் எனும் கருத்தின் அடிப்படையில் பாடப்பகுதிக்குள் நுழையலாம்.

## புத்தம் புது பூமி

பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள படத்தை உற்றுநோக்கவும். என்னென்ன? புரிந்து கொண்டீர்கள். கலந்துரையாடல் நடத்தவும்.

- இயற்கை மாசடைதல்.
- நகரமயமாதல்.
- இயற்கையைப் பாதுகாப்பதன் அவசியம்.

### செயல்பாடுகள்

**வாசித்தல்**

- மாணவர்களைத் தனித்தனியாக வாசிக்கக் கூறுதல்.
- குழுவாக வாசித்தல்.
- பாடலில் வரும் கருத்தைப் புரிந்துகொள்ளும் வகையில் வாசித்தல்.

**குரல் ஏற்றத்தாழ்வுடன் மெட்டமைத்துப் பாடுதல்.**

மாணவர்கள் தனித்தனியாக மெட்டமைத்துப் பாடுதல்.

குழுக்களாகப் பாடுதல்.

ஆசிரியர் மெட்டமைத்தல்.

சிறந்த மெட்டைத் தேர்ந்தெடுத்துப் பாடுதல்.

மெட்டமைத்துப் பாடும்போது கவனிக்க வேண்டியவை.

- தெளிவான உச்சரிப்பு.
- குரல் ஏற்றத்தாழ்வு.
- மிதமான அங்க அசைவு.
- பொருத்தமான மெட்டு.
- இராக, தாளம்.

## மதிப்பீடு

மேலே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பிடலாம்.

இது போன்ற கருத்துக்கள் அமைந்த பாடலைச் சேகரித்துப் பாடலாம்.

### ஆசிரியர் உதவிக்கு

**இயற்கையைக் காப்போம்**

கடவுள் படைத்த உலகம் – அதைக்
காப்பதற்கே நாம் பிறந்தோம்
இறைவன் படைத்த உன்னதத்தை
உயிர்ப்பிக்கவே நாம் வளர்ந்தோம்.............
உணவே மருந்தாய் அமைந்த
காலம் போய் ................
இன்று பலருக்கு
மருந்தே உணவாகிப் போனது..........
காற்றினை மறைத்துவிட்டு
'ஏயர்கூலரைத்' தேடினோம்
காய்கறியை மறந்துவிட்டு
சான்விட்ஜை நாடினோம்
நவீனம் என்னும் பெயரிட்டு
நாகரிக உலகம் படைக்கக்
கலியுகப் பிரம்மாக்களாய்
நாம் அவதரிக்க..................

சிதையிலிட்டது இயற்கையைத் தானே?
மனிதனின் பிணி தீர்க்கும் இயற்கை
இன்றோ..........
இயற்கையும் பிணி கொண்டதே..........
தீர்ப்பது யாரோ?

– கீதா பரமன்

**எதுகை, மோனை சொற்களைக் கண்டறிதல்.**

ஒரு பாடலில் அடிகள்தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும். இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும்.

**மோனை**

| | |
|---|---|
| இயற்கையன்னை | முதுமையிலும் |
| இன்றளவும் | முன்னோர்கள் |
| வயலெல்லாம் | மாசுக்கே |
| வற்றாமல் | மாவெப்பம் |
| புயல் | அயலாகி |
| புறம் விரியும் | அழித்ததனால் |
| மது சுரக்கும் | பூசுகின்ற |
| மரபு மாற்றம் | பூமியினை |

**எதுகை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இயற்கையன்னை | புயல் | வீசுகின்ற | புது | உரத்தால் | முதுமையிலும் |
| வயலெல்லாம் | அயலாகி | காசுக்கு | மது | சுரக்கும் | பொதுவென்னும் |

**பிரித்து எழுதுதல்**

| | | |
|---|---|---|
| வயலெல்லாம் | = | வயல் + எல்லாம் |
| தூய்மையாக்கும் | = | தூய்மை + ஆக்கும் |
| இயற்கையன்னை | = | இயற்கை + அன்னை |

சொற்களைச் சேர்த்து எழுதுவதிலும், பிரித்து எழுதுவதிலும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். பிரித்து எழுதுவதற்கும், சேர்த்து எழுதுவதற்குமிடையே பொருள் வேறுபடும் இடங்கள் நிறைய உள்ளன.

**பிரித்தெழுதும்போது கவனிக்க வேண்டியவை.**

- ஒரு சொல்லை இரண்டாகப் பிரிக்கும்போது இரண்டு சொற்களும் வெவ்வேறு பொருளைத் தரவேண்டும்.
- ஊர்ப்பெயர்களையும் ஆள்ப் பெயர்களையும் பிரிக்கக் கூடாது.

- **உங்களுக்குப் பிடித்த கவிதை வரிகளையும் அதற்கான காரணங்களையும் கூறுதல்.**

நாம் வாசித்த கவிதையில்,

இயற்கையன்னை மடிதன்னில் தவழ்ந்திருந்தால்
இன்றளவும் பாதுகாப்பாய் அமைந்திருக்கும்
வயலெல்லாம் மழைநீரால் செழித்திருக்கும்
வற்றாமல் ஏரி குளம் நிறைந்திருக்கும்

மேற்கூறிய வரிகளில் ஆழமான பொருள்கள் நிறைந்திருக்கின்றன. அதற்குக் காரணம்,

பூமித்தாயின் மடியில் தவழும் மழைநீர் வயல் நிலத்தைச் செழிப்பான இடமாக மாற்றுகிறது. மேலும் ஏரி, குளம் ஆகிய இடங்களில் நீர் குறையாமல் இருக்கக் காரணமாக அமைந்துள்ளது.

பூமி வளமாகச் செழித்திருக்க மழைநீர் காரணமாக அமைவதை இக்கவிதை வரிகள் உணர்த்துகின்றன. எனவே இவ்வரிகள் மிகவும் பிடித்திருக்கின்றன.

- **பாடல் வரிகளை முறையாக எழுதுதல்**

1. மழை நீரால் வயலெல்லாம் செழித்திருக்கும்.

   *வயலெல்லாம் மழைநீரால் செழித்திருக்கும்.*

2. காத்திருக்கும் புறம் விரியும் குடைபோல .

   *புறம் விரியும் குடைபோலக் காத்திருக்கும்.*

3. காய்கறிக்கும் மலருக்கும் மது சுரக்கும்.

   *மது சுரக்கும் மலருக்கும் காய்கறிக்கும்.*

இதுபோன்று பாடலில் உள்ள பல வரிகளையும் மாற்றிக் கொடுப்பதன் வழியாக மாணவர்கள் பாடலை வாசிப்பதற்கு வாய்ப்பு கிடைக்கிறது. அதனூடாகச் சரியான பாடல் வரிகளைக் கண்டறிகிறார்கள்.

# நெகிழியில்லா உலகம்

## வினாக்களுக்கு விடை காணுதல்.

> **வாசித்தல்**
>
> கொடுக்கப்பட்டுள்ள வரிகளில் அடங்கியுள்ள கருத்துக்களைப் புரிந்து கொள்வதே வாசித்தல். இந்த வாசிக்கும் திறனை ஊக்குவித்தலே ஆசிரியரின் கடமை.

- 'பாலிதீன்' எனும் வார்த்தை எந்த சொல்லைக் குறிப்பிடுகிறது?

  (பாலி எத்தீன்) நெகிழி

- முதன் முதலில் பாலிதீன் பை உருவாக்கப்பட்ட வருடம் எது?

  1933

- நெகிழியினால் ஏற்படும் தீமைகளை எழுதுங்கள்?

  பாடப்பகுதியை நன்கு வாசித்து நெகிழியினால் ஏற்படும் தீமையை எழுதக் கூறவும்.

## முத்திரை வாக்கியங்கள் தயாரித்தல்

ஒரு கருத்தை வலியுறுத்துவதற்கு முழங்கும், பொருள் பொதிந்த தொடர்களே முத்திரை வாக்கியம்

எரிக்காதே! எரிக்காதே!
நெகிழியை எரிக்காதே!

நெகிழியை எரிக்காதே!
நச்சுக் காற்றைப் பரப்பாதே!

தவிர்ப்போம்! தவிர்ப்போம்!
நெகிழியைத் தவிர்ப்போம்!

நெகிழிப்பைக்குப் பதிலாகத்
துணிப்பையைப் பயன்படுத்துவோம்!

> **மதிப்பிடுதல்**
>
> கருத்துகளைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் பிறர் கவனத்தை ஈர்க்கக்கூடியதாகவும் வெளியிடுதல் வேண்டும்.

- **நெகிழிப் பொருட்களின் பெயர்களை எழுதுதல்.**
  - நெகிழி இருக்கை (நாற்காலி)
  - வாளி
  - தட்டு

அவரவர் வீட்டிலுள்ள நெகிழிப் பொருட்களின் பெயர்களை மாணவர்களிடம் எழுதக் கூறவும்.

- **குறிப்பு தயாரித்தல்.**

பாடப்பகுதியை வாசித்து நெகிழியினால் ஏற்படும் தீமைகளைக் கண்டறிதல். அதற்கான தீர்வுகளைக் கலந்துரையாடுதல். நூலகங்களிலுள்ள புத்தகங்கள், இணையம் இவற்றின் உதவியோடு நெகிழியைத் தவிர்க்கத் தேவையான கருத்துக்களைச் சேகரித்து குறிப்பாக எழுதவும். எழுதியதை வாசிக்கவும். பின்னர் மாணவர்கள் குழுவாக இருந்து மேம்படுத்தவும்.

**கவனிக்க வேண்டியவை.**

- ★ எழுத்துப் பிழை.
- ★ வாக்கியப் பிழை.
- ★ கருத்துத் தெளிவு.
- ★ துவக்கமும் முடிவும்.

## ஏன்? எப்படி? எப்போது?

- **கதையை வாசித்துக் கருத்தைக் கூறுதல்**

ஓரிருமுறை வாசிக்கவும், கருத்தைப் புரிந்து பொருளுணர்ந்து வாசிக்கக் கூறவும். வாசித்ததன் அடிப்படையில் கருத்துகளை வெளியிட வாய்ப்பளிக்கவும். பின்னர் குழுவாக வாசிக்கலாம்.

- **கதையில் கூறப்படும் மரங்களின் பெயர்கள்.**

  *வேப்ப மரம், அரச மரம்*

- **மரங்களினால் ஏற்படும் நன்மைகள் எவை?**

  கலந்துரையாடிக் குறிப்பெழுதுதல்.

  மாணவர்களைச் சுயமாகக் குறிப்பெழுதக் கூறவும்.

- **கதையை வாசித்துப் பொருள் புரிந்து நடித்துக் காட்டுதல்.**

  மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து நடிக்கக் கூறலாம். கதையை வாசித்து மாணவர்கள் கதாபாத்திரங்களைத் தீர்மானிக்க உதவுதல்.

- **உங்களுக்குத் தெரிந்த மரங்களின் பெயர்களை அட்டவணைப்படுத்தவும்.**

  மாணவர்கள் சுயமாக எழுதவும்.

- **சுவரொட்டி தயாரித்தல்.**

சுவரொட்டி மாதிரி

**சுற்றுச் சூழலைப் பாதுகாப்போம்**

| | | |
|---|---|---|
| நாள் | : | ஜூன் – 20 |
| இடம் | : | அரசு நடுநிலைப்பள்ளி, கருங்களம் |
| நேரம் | : | காலை 11.00 மணி |
| தொடங்கி வைப்பவர் | : | திரு. சந்திரகுமார்<br>சமூக ஆர்வலர் |
| விழிப்புணர்வு வகுப்பு நடத்துபவர் | : | திரு. முருகன்<br>வன ஆய்வாளர் |

அனைவரும் வருக! ஆதரவு தருக!

**சுவரொட்டி தயாரிக்கும்போது கவனிக்கவேண்டியவை.**

- நிகழ்வின் பெயரைப் பெரிதாக எழுத வேண்டும்.
- ஏனைய தகவல்களான நாள், இடம், நேரம் தொடங்கி வைப்பவர் போன்றவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- சுருக்கமான சொல்லமைப்பு.
- அனைவரையும் கவரும் வடிவமைப்பு.

இவற்றின் அடிப்படையில் சுவரொட்டியை மதிப்பிடலாம்.

- **சுற்றுச்சூழல் மாசடைதலுக்கான காரணங்கள் குறித்து குறிப்பு எழுதுதல்.**

மாணவர்கள் குழுக்களாகக் கலந்துரையாடிச் சுற்றுச்சூழல் மாசடைதலைத் தடுப்பதற்கான வழிமுறைகளை எழுதவும்.

## நகரமயமாதல்

- **காற்று, மழை, நிலம் எனும் தலைப்புகளில் ஹைக்கூ எழுதுதல்.**

**காற்று**

"ஆயிரம் அறிவியல் நீங்கள்
அறிந்திருந்தாலும் ஆயுள்
கொடுக்காது அது உங்களுக்கு!
நான் இல்லை என்றால்.........."

**நிலம்**

"விதை விழுந்த நிலம்
தரிசானது
விலை விழுந்த நிலம்
கட்டிடமானது"

**மழை**

இடிமேளம் கொட்ட
மின்னல் படம் பிடிக்க
விண்ணில் யாருக்கோ
கல்யாணம்.
ஆனால் அர்ச்சதை மட்டும்
பூமிக்கு! மழை!

- **'சுற்றுச்சூழல் கேடுகளாய்' என்ற கவிதை வரிகளின் கருத்தை எழுதுதல்.**

அதிகரித்து வரும் பேருந்துகளில் இருந்து வெளிவரும் கரியமில வாயு சுற்றுச்சூழலைப் பெரிதும் பாதிக்கிறது. நாமே சுற்றுச்சூழலை அழித்து விட்டு தூயக் காற்றுக்காக அலைகிறோம்.

- **'விளைநிலமெங்கும்' என்று தொடங்கும் கவிதை வரிகளின் கருத்துக்களை எழுதுங்கள்.**

விவசாய நிலங்களை எல்லாம் அழித்து கட்டிடங்கள் கட்டினோம். இப்போது விலங்குகள் மேய விளைநிலங்கள் இல்லாமல் ஆகிவிட்டன.

## பூமியைக் காப்போம்

- **எதுகை, மோனை சொற்களைக் கண்டறிந்து எழுதுதல்**

| எதுகை | மோனை |
|---|---|
| மனிதா | இனியும் |
| இனியும் | இயற்கை |
| இமய | புகைகள் |
| சமயம் | புன்னகை |

- **கவிதையை வாசித்துப் பொருள் எழுதுங்கள்.**
  - ⋆ மாணவர்களைக் குழுவாக்குதல்.
  - ⋆ குழுவில் கவிதையை வாசித்தல்.
  - ⋆ கருத்துகளை வெளியிடுதல்.
  - ⋆ மேம்படுத்தி எழுதுதல்.
  - ⋆ குழு வெளியீடு நடத்துதல்.
  - ⋆ ஆசிரியரின் கருத்தை உட்படுத்திக் குறிப்பேட்டில் எழுதுதல்.
- **பிரித்து எழுதுதல்.**

வாய்த்ததென்று – வாய்த்தது + என்று

திடுமென – திடும் + என

- **விடை கண்டுபிடித்தல்.**

மாணவர்களே கவிதை வரிகளை ஓரிருமுறை நன்கு வாசித்து விடை கண்டறியவும்

## தண்ணீர் தண்ணீர்

**வாசிப்போம் கண்டுபிடிப்போம்.**

- வாசிப்பை மேம்படுத்தவும், பொருள் உணரவும் சரியான இடத்தில் பயன்படுத்துவதற்காகவே இந்தச் செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே மாணவர்கள் சுயமாக வாசித்து விடை கண்டுபிடிக்கவும்.

**மனு கொடுக்கலாம்**

உங்கள் பகுதியில் தண்ணீர்த் தட்டுபாடு உள்ளதால் அப்பகுதியில் ஒரு பொதுக் குழாய் அமைத்துத் தருமாறு பஞ்சாயத்துத் தலைவருக்கு ஒரு கோரிக்கை மனு எழுதுதல்.

**கோரிக்கை மனு**

நமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக அதிகாரிகளுக்கு அளிக்கும் கடிதத்தைக் கோரிக்கை மனு என்பர்.

அனுப்புனர்,

சரண், மு.
முத்தையா பவனம், நெல்லிமூடு,
குளத்துப்புழை.

பெறுநர்,

கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்,
கிராமப் பஞ்சாயத்து அலுவலகம்,
குளத்துப்புழை.

பொருள் : பொதுக் குழாய் அமைப்பது தொடர்பாக

ஐயா,

குளத்துப்புழை பஞ்சாயத்திற்கு உட்பட்ட வார்டு எண் 15 நெல்லிமூடு பகுதியில் வாழும் மக்கள் குடிநீருக்காக வெகுதூரம் கால்நடையாகச் செல்ல வேண்டியதாக உள்ளது. இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் வகையில் எங்கள் பகுதியில் ஒரு பொதுக்குழாய் அமைத்துத் தரவேண்டும் எனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லிமூடு — இவண்,
20.06.2024 — தங்கள் உண்மையுள்ள
சரண் மு.

## மதிப்பீடு

- யார், யாருக்கு, கடித அமைப்பு.
- உள்ளடக்கம், கருத்துத் தெளிவு.
- சுருங்கக் கூறுதல்.
- முடிவு (இவண்).

# சுற்றுச்சூழல் பாதுகாப்பு

அகர முதலியைப் பயன்படுத்திப் பொருள் காணுதல்.

விண்ணில் – வானில்

காண்கிலேன் – காணவில்லை

பாடலில் வரும் புதிய சொற்களைக் கண்டறிந்து பாடப்புத்தகத்தின் இறுதிப்பகுதியில் காணப்படும் அகர முதலியையோ அல்லது நூலகத்திலுள்ள அகராதியையோ அல்லது இணையதள அகராதியையோ பயன்படுத்திப் பொருளைக் கண்டறியவும்.

- **கவிதையை வாசித்துப் பொருள் அறிந்து அதனை உரைநடையாக எழுதுதல்.**
- **ஒரு மொழி வெளியீட்டு வடிவத்தை மற்றொரு மொழி வெளியீட்டு வடிவமாக மாற்றி எழுதுதல்.**

மாதிரி,

காற்று என்பது கண்ணுக்குப் புலப்படவில்லை எனினும் நாம் காணும் இடங்களிலெல்லாம் இருக்கிறது. மரங்களிலும், மக்கள் கூடும் இடங்ளிலும், பாடும்பாட்டிலும் காற்றை நாம் காணலாம். ஆய்ந்து பார்க்கையில் ஆண்டவனாகவும் காற்றைப் பார்க்கலாம். கடலிலிருந்து பிறந்து அலையாக மாறி விண்ணில் பறந்து மழையாக மாறி இறுதியில் நம் உயிர் மூச்சாக வாழ்கிறது. இப்படிப்பட்ட காற்றுடன் வாழும் நாம் வீணாகப் பகைத்துக் கொள்ளாமல் அன்புடன் அனைவரும் ஒன்று கூடி வாழ்வோம்.

- **கவிதையில் வரும் அடுக்குத் தொடர்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.**

தேடித்தேடி

ஆடி ஆடி

பாடிப் பாடி

பேசிப் பேசி

- **கவிதையில் உங்களுக்குப் பிடித்த வரிகளையும் அதற்கான காரணத்தையும் எழுதக் கூறுதல்.**

# தாவர தெய்வம்

- **பாடப்பகுதியை வாசித்துப் புதிய சொற்களைக் கண்டறிதல்.**

  பரிமாறினான்

  உணவருந்தி

  பிரமாதமாக

  அற்புதமாக

  திடுக்கிட்டவராய்

- **பாடப்பகுதியை வாசித்து விடை காணுதல்.**

  மாணவர்கள் பாடப்பகுதியை வாசித்து விடையைக் கண்டறிய உதவவும்.

- **மரங்களை வெட்டுவதற்கெதிரான முத்திரை வாக்கியங்கள் எழுதுதல்.**

வெட்டாதே! வெட்டாதே!
மரங்களை வெட்டாதே!

மரம் இல்லையேல்
மழை இல்லை

மரம் ஒரு வரம்

மரம் நடுவோம்!
மழை பெறுவோம்!

- மரங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையிலான துண்டுப்பிரசுரம் தயாரிக்கவும்.

**துண்டுப்பிரசுரம்**

**தலைமுறை வாழ**

அன்புடையீர்,

நாம் வாழும் பூமியின் இன்றைய நிலை குறித்துச் சிந்தித்ததுண்டா? புவி வெப்பமயமாவதற்கான காரணத்தை அறிவீர்களா? மனித குலம் வாழ மரங்கள் அளிக்கும் பலன்களை அறிவீர்களா? மனிதன் சுவாசிக்க உதவும் பிராணவாயுவை உற்பத்தி செய்யும் மையமே மரங்கள். தூசி, புகை, காற்றில் கலந்திருக்கும் நச்சுப்பொருள்களை மரத்தின் இலைகள் வடிகட்டி விடுகின்றன.

ஒவ்வொரு மரமும் மண்ணை இறுகப்பற்றிக் கொள்கிறது. பூமியை மிதமான வெப்பநிலையில் வைத்திருப்பது மரங்களே. மரங்கள் பறவைகளின் வாழிடங்களாக உள்ளன. இன்று பல்வேறு காரணங்களால் மரங்கள் வெட்டப்படுகின்றன. மரங்களை அழிப்பதால் அவற்றால் கிடைத்து வந்த பயன்கள் மறைந்து எதிர்மாறான விளைவு ஏற்படுகிறது. எனவே, ஒவ்வொரு வீட்டிலும் மரக்கன்றுகளை நட்டி வளர்க்க வேண்டும். இடவசதி இல்லாதவர்கள் அருகிலுள்ள பூங்காக்களில் வளர்க்க முயற்சிக்கலாம்.

நமது சந்ததியினர் நலமாக வாழ மரங்களை வாழ வைப்போம்.

மரம் நடுவோம்!
மானுடம் காப்போம்!

பசுமை மன்றம்.

**துண்டுப்பிரசுரம் தயாரிக்கும் போது கவனிக்க வேண்டியவை.**

- சொல்ல வந்த தகவலைத் தெளிவாகக் குறிப்பிடுதல்.
- சிறுசிறு பத்திகளாக எழுதுதல்.
- வாசிக்கத் தூண்டும் நடையில் தருதல்.
- அன்புடையீர், நண்பர்களே, உங்கள் கவனத்திற்கு இது போன்ற விளித் தொடர்களை முதலில் அமைத்துத் துவங்குதல்.
- வெளியிட்டவர் பெயர், முகவரி போன்ற தகவல்களைப் பிரசுரத்தின் இறுதியில் கொடுக்கலாம்.

## சுற்றுச்சூழல் இயக்கங்கள்

- **விடை காண்போம்.**
  - ★ சிப்கோ இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு 1970.
  - ★ சிப்கோ இயக்கம், பிஷ்னோய் இயக்கம்.
  - ★ பிஷ்னோய் என்பது 29 நன்னெறிகள் என்பதாகும்.
- **சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கங்களின் பொறுப்பாளர்களை நேர்காணல் நடத்துவதற்கான ஒரு வினாநிரல் தயாரித்தல்.**

**வினாநிரல்**

வினாக்கள் நம் சிந்தனையின் வெளிப்பாடுகள். நாம் ஏதேனும் ஒன்றைக் குறித்துச் சிந்திக்கும் போது அதனைப் பற்றி மேலும் அறிய, அறிந்தவற்றை உறுதிப்படுத்த, நம் மனதில் வினாக்கள் ஊற்றெடுக்கின்றன. எனவே, குழந்தைகளிடம் கேள்வி கேட்கும் திறனை உருவாக்க வேண்டும்.

- உங்களுக்குச் சிறுவயதிலிருந்தே இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்ததா?
- இயற்கையைப் பாதுகாக்கும் எண்ணம் எவ்வாறு உருவானது?
- சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான போராட்டங்களில் பங்கெடுத்துள்ளீர்களா?
- இவ்வாறு செய்யப்படும்போது ஏதாவது பிரச்சனைகள் ஏற்பட்டதுண்டா?
- சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்கு எவ்வாறு இருக்க வேண்டும்.
- சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நீங்கள் கூறும் அறிவுரைகள் எவை?

**வினாநிரல் தயாரிக்கும் போது கவனிக்க வேண்டியவை.**

கொடுக்கப்பட்ட கருத்துக்கள் வந்தடையும் வண்ணம் வினாக்கள் அமைதல் வேண்டும்.

குறிப்பிட்ட நேரத்தில் கேட்கும் வகையில் வினாக்கள் அமைய வேண்டும்.

வரிசையாக (முறையாக) இருத்தல் வேண்டும்.

கருத்துத் தெளிவு வேண்டும்.

## தொடர்ச் செயல்பாடுகள்

- **வளரும் மரம்**

  ஒவ்வொரு மாணவர்களையும் ஒரு மரம் நடக் கூறுதல். அந்த மரத்திற்குத் தண்ணீர் ஊற்றி வளர்க்கச் சொல்லுதல். வளரும் மரம் எனும் குறிப்பேட்டில் அந்த மரத்தின் வளர்ச்சியை அடையாளப் படுத்துதல். ஆசிரியர் அறிவுரைகளும் ஊக்குவித்தலும் நடத்துதல்.

## அலகு மதிப்பீடு

I. அ. இன்றைய காலத்தில் இயற்கை பல்வேறு வழிகளில் மாசடைகிறது. இக்கருத்தை மனதில் கொண்டு 'நெகிழி இயற்கைக்குக் கேடு' எனும் தலைப்பில் ஒரு குறிப்பு தயாரிக்கவும்.

ஆ. நெகிழிக் கழிவு மேலாண்மையின் 3 முறைகளை எழுதவும்.

II. உங்கள் பள்ளியில் நடைபெறும் 'எனது பள்ளிக்கூடம் எனது மரம்' எனும் விழாவிற்கான ஒரு நிகழ்ச்சி நிரல் தயாரிக்கவும்?

III. தண்ணீரை வீணாக்குவதற்கு எதிரான முத்திரை வாக்கியங்கள் எழுதவும்.

IV. 1936 ஆகஸ்டு மாதம் 1–ஆம் நாள் பிறந்தார் புலவர். மி.காசுமான. இவர் குமரி மாவட்டத்தைச் சார்ந்தவர். முத்தாரம், தமிழ்க் காப்பு இயம் முதலானவை இவது படைப்புகளாகும். இவருக்குத் தமிழ்ச்சுடர், கபிலர், குறளாய்வுச் செம்மல் போன்ற விருதுகள் கிடைத்துள்ளன. இவர் 2022–அக்டோபர் 21–ஆம் நாள் காலமானார்.

குறிப்புகளின் அடிப்படையில் ஆசிரியர் குறிப்பு எழுதவும்.

V. சுவரொட்டி தயாரித்தல்.

உங்கள் பள்ளியில் நடைபெறும் இயற்கைப் பாதுகாப்பு விழாவிற்கான ஒரு சுவரொட்டி தயாரிக்கவும்.

# 2 பேதமில்லா உலகம்

**அலகு அறிமுகம்**

ஒரு மனிதன் தன் பிறப்பு முதல் இறப்பு வரை சமூகத்தோடு ஒன்றி வாழ்கிறான். சமூகமயமாக்கலுக்கும் அவனே காரணமாக விளங்குகிறான். சமூகமயமாக்கலில் ஏற்படும் வேற்றுமைகளையும் அதற்கான காரணங்களையும் அவற்றிற்கான தீர்வுகளையும் எடுத்துரைக்கும் வண்ணம் இவ்வலகு வடிவமைக்கப்டுள்ளது.

பொன்னுலகம் செய்திடுவோம் என்னும் தலைப்பு வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையாக வாழ்வதற்கும் சமூகத்தில் சாதி, மத, பொருளாதார ஏற்றத்தாழ்வின்றி அனைவரும் சமமாக வாழ்வதற்குரிய வழிமுறைகளைக் கவிதை, வாழ்க்கைக்குறிப்பு, கட்டுரை வாயிலாக எடுத்துரைக்கிறது. ஊனம் ஒரு தடையல்ல என்னும் தலைப்பில் தமிழ் அறஇலக்கியங்கள் உணர்த்தும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகளையும் சாதனை புரிவதற்கு ஊனம் ஒரு தடையல்ல என்பதையும் தமிழ் இலக்கியத்தில் சிறந்து விளங்கிய மாற்றுத்திறனாளிகளாகிய புலவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் சமகாலத்தில் சாதனைபடைத்த மாற்றுத்திறனாளிகளான வீராங்கனைகளின் சாதனைகளையும் எடுத்துரைக்கும் வண்ணம் இவ்வலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.

சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளைப் புரிந்துகொண்டு அனைத்து மக்களையும் ஒரே போல் காணும் மனநிலையை உருவாக்குவதே இவ்வலகின் நோக்கமாகும்.

இவ்வலகைக் கற்பிக்கத் தேவையான காலம்
24 பிரிவேளைகள்

| கரு | துணைக்கரு | இலக்கிய வடிவங்கள் | கற்றல் நோக்குகள் | | | மொழிக் கூறுகள் | மொழி வெளியீட்டு வடிவங்கள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கருத்துகள் | திறன்கள் | மனப் பான்மைகள் | | | |
| சமூக மயமாக்கல்<br><br>பேதமில்லா உலகம் | சமூகத்தில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் | கவிதை<br><br>வாழ்க்கை நிகழ்வு<br><br>கதை | சுசமூகத்தில் அனைவருக்கும் சம உரிமை கிடைக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளுதல் | • மெட்டமைத்துப் பாடும் திறன்<br>• சொற்பொழிவுக் குறிப்பு எழுதும் திறன்<br>• முத்திரை வாக்கியம் எழுதும் திறன்<br>• சிறுகுறிப்பு எழுதும் திறன்<br>• கருத்திற்கேற்ப கட்டுரை எழுதும் திறன்<br>• நிகழ்ச்சிநிரல் தயாரிக்கும் திறன்<br>• கடிதம் எழுதும் திறன்<br>• தகவல்களைத் திரட்டித் தொகுப்பு உருவாக்கும் திறன் | அனைவரும் சமம் என்பதை உணர்தல் | ஒத்த ஓசையுடைய சொற்களைக் கண்டறிதல் | • மெட்டமைத்துப் பாடுதல்<br>• சொற்பொழிவுக் குறிப்பு எழுதுதல்<br>• முத்திரை வாக்கியம் எழுதுதல்<br>• சிறுகுறிப்பு எழுதுதல்<br>• கருத்திற்கேற்ப கட்டுரை எழுதுதல்<br>• நிகழ்ச்சிநிரல் தயாரித்தல்<br>• பாராட்டுக் கடிதம் எழுதுதல்<br>• தகவல்களைத் திரட்டித் தொகுப்பு உருவாக்குதல் | தரநிர்ணயக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பிடுதல் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஊனம் ஒரு தடையல்ல | செய்யுள் பத்திரிகைச் செய்தி விளக்கக் கட்டுரை | வெற்றியை அடைய ஊனம் ஒரு தடயல்ல என்பதை அறிந்து கொள்ளுதல் | • வாசித்துப் பொருள் அறிந்து விடையைக் கண்டுபிடிக்கும் திறன்<br>• சிறுகுறுப்பு எழுதும் திறன் | தன்னைப்போல் பிறரையும் காணுதல்<br><br>மாற்றுத்திறனாளி களுக்கு உதவுதல் | பெயரெச்சம் பிரித்து எழுதுதல் பொருள் காணுதல் எதிர்ச்சொல் எதுகை, மோனை கண்டறிதல் | விடை காணுதல் சிறுகுறிப்பு எழுதுதல் | |
| | நகரமயமாதல் சமூகத்தில் பல்வேறு தாக்கங்களை உருவாக்கு கிறது | கவிதை கதை | நவீன மயமாதலால் இயற்கையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்கின்றனர் | • மெட்டமைத்துப் பாடும் திறன்<br>• படம் வரையும் திறன்<br>• குறிப்பு எழுதும் திறன்<br>• ஆசிரியர் குறிப்பு எழுதும் திறன்<br>• கட்டுரை எழுதும் திறன்<br>• உரையாடல் எழுதும் திறன் | நகரமயமாதலால் ஏற்படும் மாற்றங்களை அறிகின்றனர் | எதுகை, மோனை சொற்களைக் கண்டறிதல் வட்டார சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிதல் | மெட்டமைத்துப் பாடுதல் படம் வரைதல் குறிப்பு எழுதுதல் ஆசிரியர் குறிப்பு எழுதுதல் கட்டுரை எழுதுதல் உரையாடல் எழுதுதல் | |

## கற்றல் இலக்குகள்

- ஒரே ஓசையுடைய சொற்களைக் கண்டறிந்து எழுதுகிறார்கள்.
- மெட்டமைத்துப் பாடுகிறார்கள்.
- பாடலிலுள்ள பிடித்த வரிகளை எழுதிக் காரணங்களை எழுதுகிறார்கள்.
- பாடப்பகுதியை வாசித்து விடை காண்கிறார்கள்.
- சிறுகுறிப்பு எழுதுகிறார்கள்.
- கட்டுரை எழுதுகிறார்கள்.
- அனுபவக் கட்டுரை எழுதுகிறார்கள்.
- நிகழ்ச்சி நிரல் தயாரிக்கிறார்கள்.
- பாராட்டுக்கடிதம் எழுதுகிறார்கள்.
- தகவல்களைச் சேகரித்து தொகுப்பு வெளியிடுகிறார்கள்.
- அகராதியைப் பயன்படுத்திப் பொருள் காண்கிறார்கள்.
- பிரித்து எழுதுகிறார்கள்.
- படம் வரைகிறார்கள்.
- ஆசிரியர் குறிப்பு தயாரிக்கிறார்கள்.
- எதுகை, மோனை சொற்களைக் கண்டறிந்து எழுதுகிறார்கள்.
- தகவல்களைச் சேகரித்துக் கட்டுரை எழுதுகிறார்கள்.
- உரையாடல் தயாரிக்கிறார்கள்.

## கற்றல் துணைக்கருவிகள்

- பாடநூல்.
- கிராமங்களின் படங்கள்.
- இணையம்.
- காணொளி (Video).

**ஆயத்தச் செயல்பாடு**

ஆசிரியர் சில நபர்களின் (தலைவர்கள், நடிகர்கள், ஊனமுற்றோரில் சாதனை படைத்தவர்கள், ஏழ்மையான நிலையிலிருந்து முன்னேறியவர்கள்) படங்களைக் காண்பித்து அவர்களைப் பற்றிய தகவல்களைக் கேட்கலாம். ஆசிரியர் சில தகவல்களைக் கூறவும் செய்யலாம். இதுபோன்று வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து முன்னேறியவர்களையும் சமூக ஆர்வலர்களையும் குறித்து கற்போமா எனக் கேட்டுப் பாடப்பகுதிக்குள் நுழையலாம்.

## பொன்னுலகம் செய்திடுவோம்

### செயல்பாடுகள்.

**வாசிப்போம்/கண்டுபிடிப்போம்.**

- பாடலை வாசித்து ஒரே ஓசையுடைய சொற்களைக் கண்டறிந்து எழுதுதல்.

**வாழ்ந்திடுவோம் / காத்திடுவோம்.**

- அழித்திடுவோம்/போற்றிடுவோம்.
- கற்றிடுவோம் /செய்திடுவோம்.

**இசையோடு பாடுவோம்.**

முன்னலகில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கவனிக்கவும். அதன் அடிப்படையில் மெட்டமைத்துப் பாடலாம்.

**'சமூகத்தில் அனைவரும் சமம்' எனும் தலைப்பில் குறிப்பு தயாரித்து சொற்பொழிவாற்றுதல்.**

சொற்பொழிவு என்பது ஒரு குறிப்பிட்ட கருத்தை வழங்குவதற்கும் வலியுறுத்துவதற்கும் குறிக்கோளுடன் உரையாற்றுவதே ஆகும்.

சமூகத்தில் அனைவரும் சமம் என்பதைக் குறித்துள்ள தகவல்களைத் திரட்டி சொற்பொழிவுக் குறிப்பு தயாரிப்பதற்கு மாணவர்களைத் தூண்டுதல். தயாரித்த சொற்பொழிவுக் குறிப்பை வெளியிடுவதற்கு அவர்களை ஊக்குவித்தல். ஆசிரியர் அதனை மேம்படுத்தி வெளியிடவும்.

**சொற்பொழிவை மதிப்பிடுதல்**

- பேசப்போகும் தலைப்பு.
- அனைவர் கவனத்தையும் ஈர்க்கும் வகையில் முன்னுரை கூறுதல்.
- கருத்திற்கேற்ப குரல் ஏற்றத்தாழ்வுடன் பேசுதல்.
- மேற்கோள்கள் இணைத்தல்.
- எடுத்துக்கொண்ட பொருளை நிறுவுதல்.
- 'உரையை முடித்தல்.

- இணையத்தின் வழியாகச் சொற்பொழிவை அறிமுகம் செய்யலாமே
- உங்கள் வட்டாரத்திலுள்ள சொற்பொழிவாளர்களை அழைத்து சொற்பொழிவு நடத்தலாம்.

**சமூக ஒற்றுமையை உணர்த்தும் முத்திரை வாக்கியம் தயாரித்தல்.**

ஒன்றுபட்டால்
உண்டுவாழ்வு!

ஒற்றுமையே
உயர்வு தரும்!

கூடிவாழ்ந்தால்
கோடி நன்மை!

சேர்ந்து வாழ்!
செழுமையாக வாழ்!

வேற்றுமையைத் தவிர்ப்போம்!
ஒற்றுமையைக் காப்போம்!

முத்திரை வாக்கியம் பற்றிய குறிப்புகள் முன் அலகில் கொடுக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் மதிப்பிடவும்.

**பாடலில் பிடித்த வரிகளை எழுதி அதற்கான காரணங்களை எழுதுதல்.**

- பாடலை ஓரிருமுறை நன்றாக வாசிக்கக் கூறுதல்.
- பொருள் உணர்ந்து வாசித்தல்.
- வாசித்துப் பொருள் உணர்ந்ததன் அடிப்படையில் பிடித்த வரிகளையும் அதற்கான காரணங்களையும் மாணவர்களிடம் எழுதக்கூறுதல்.
- ஆசிரியர் சில எடுத்துக்காட்டுகளை முன்வைக்கலாம்.

# காமராஜரின் எளிமை

- **பாடப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுதல்.**

  ★ காமராஜர் சென்னையில் எங்கு வசித்து வந்தார்?

  திருமலைபிள்ளைச் சாலையில்

  ★ காமராஜரின் தங்கையின் பெயர் என்ன?

  நாகம்மாள்

  ★ ஆட்சி நடத்துபவர்கள் கண்டிப்புடன் இருக்க வேண்டும் என்று காமராஜர் கூறக் காரணம் என்ன?

  ஆட்சி நடத்துபவர்கள் கண்டிப்புடன் இருந்தால்தான் அரசு அலுவலர்களிடம் ஊழல் இல்லாமல் இருக்கும் என காமராஜர் கூறுகிறார்.

  ★ 'கோட்டை' என்ற சொல் எதனைக் குறிப்பிடுகிறது?

  தலைமைச் செயலகம்

**காமராஜரின் பண்புகள் பற்றி சிறுகுறிப்பு எழுதுங்கள்.**

மாணவர்கள் பாடப்பகுதியை வாசித்துப் பொருள் உணர்ந்து குறிப்பு எழுதலாம். எழுதிய குறிப்பை அவர்கள் வாசிக்கும்போது ஆசிரியர் மேம்படுத்துவதற்கான உதவிகளைச் செய்யலாம். இறுதியாக ஆசிரியர் தான் எழுதிய மாதிரியை வெளியிடவும்.

**கட்டுரை எழுதலாம்**

**கட்டுரை எழுதும்போது கவனிக்க வேண்டியவை.**

- முன்னுரை, பொருளுரை, முடிவுரை.
- மொழிநடை.
- எடுத்துக்காட்டுகள்/மேற்கோள்கள்.
- கருத்துத்தெளிவு.

கொடுக்கப்பட்டுள்ள தலைப்பிற்கேற்ப தகவல்களைத் திரட்டிக் கட்டுரை எழுதலாம்.

மாதிரி

நான் ஒரு மருத்துவரானால்.....

உலகில் பல்வேறு தொழில்கள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு தொழிலைத் தங்கள் இலட்சியமாகக் கொண்டிருப்பர். அத்தகைய கனவு நனவாகும்போது வாழ்வே அவர்களுக்கு வெளிச்சமாகிறது. அப்படிப்பட்ட ஒரு கனவு எனக்கும் உண்டு. நான் ஒரு மருத்துவரானால்,,,,,,,

நான் ஒரு மருத்துவரானால் அரசாங்க மருத்துவமனையில் பணிபுரிவேன். நோயாளிகளுடன் உறவாடி அவர்களின் நோய்களைத் தீர்ப்பதற்குத் துணைநிற்பேன். ஏழைகளுக்கும் மாணவர்களுக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பேன். என்னை உயர்த்திய சமுதாயம் நோய்நொடியின்றி வாழப் பாடுபடுவேன். அனைவருடனும் அன்புடன் பழகி அவர்களை மதித்து சிறந்த மருத்துவராகத் திகழ்ந்து எனது கனவை நிறைவேற்றுவேன். என் முன்னால் வரும் அனைவரையும் சமமாக மதித்து தொழில் தர்மத்தோடு அவர்களிடம் செயல்படுவேன்.

## ஏழ்மை தடையல்ல

- **வினாக்களுக்கு விடை எழுதுதல்.**

மாணவர்கள் தாமே பாடப்பகுதியை வாசித்து விடையைக் கண்டறியவும்.

- **சுற்றுலா சென்ற அனுபவத்தைக் கட்டுரையாக எழுதுதல்.**

மாணவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாகத் தங்களது அனுபவத்தை எழுதும்படிக் கூறவும். எழுதியதை வாசித்து வெளியிடவும். ஆசிரியர் மாணவர்கள் எழுதியதை மேம்படுத்த வேண்டிய அறிவுரைகளை வழங்கலாம். மேம்படுத்திச் சிறந்த அனுபவக்கட்டுரை எழுதத் துணைநிற்கவும்.

- **நிகழ்ச்சி நிரல் தயாரித்தல்.**

**நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் போது கவனிக்க வேண்டியவை.**

- நிகழ்ச்சியின் தலைப்பு.
- இடம், நாள், நேரம்.
- இறைவணக்கம்.
- தலைமையுரை.
- துவக்க உரை.
- சிறப்புரை.
- வாழ்த்துரை.
- நன்றியுரை.

நிகழ்ச்சி நிரலின் மாதிரியைத் தயாரித்துக்காட்டுங்கள். மாணவர்களை அதுபோல் தயாரிக்கும்படிக் கூறவும்

**இளைஞர் கலைவிழா**

ஜூலை – 15 – 2024 காலை 1 0 மணி

| | | |
|---|---|---|
| இறைவணக்கம் | : | மாணவர்கள் |
| தலைமையுரை | : | ஜெயசீலன் ஜீ, தலைமையாசிரியர் |
| துவக்க உரை | : | சுதீர், பஞ்சாயத்துத் தலைவர். |
| சிறப்புரை | : | பிரபஞ்சன், நாட்டுப்புறக் கலைஞர் |
| வாழ்த்துரை | : | கோகுல்கிருஷ்ணா, வார்டு உறுப்பினர். |
| | : | சாத்விகா, MPTA உறுப்பினர் |
| | : | அனகா, ஆசிரியர் செயலர் |
| நன்றியுரை | : | சோபியா, ஒருங்கிணைப்பாளர் |

இதுபோன்று பரிசளிப்பு விழாவிற்கான நிகழ்ச்சிநிரலைத் தயாரிக்கக் கூறவும்.

- **கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற கண்ணனைப் பாராட்டிப் பாராட்டுக் கடிதம் எழுதுங்கள்.**

பாராட்டுக் கடிதம்

குழந்தைகளிடம் பிறரை எவ்வாறெல்லாம் பாராட்டுவீர்கள் எனக் கேட்கலாம். பரிசளித்தல், வாழ்த்துக்கூறுதல், கடிதம் எழுதுதல் எனக் கூறி, பாராட்டுக் கடிதத்தை அறிமுகப்படுத்துங்கள்.

**கடிதம் எழுதும் போது கவனிக்க வேண்டியவை**

- வலப்பக்கம் இடம், நாள் போன்றவை எழுத வேண்டும்.
- ஆருயிர் நண்பா, அன்புள்ள…… எனும் மதிப்பு மிக்கச் சொற்களைப் பயன்படுத்துதல்.
- சுருங்கக் கூறுதல்.
- தெளிவானக் கருத்து.
- கடிதத்தின் முடிவில் அன்புள்ள, அன்புடன் போன்ற சொற்களைப் பயன்படுத்துதல்.
- உறையின் மேல் பகுதியில் முகவரி எழுதுதல்.

தேக்குமலை
10-08-2024

அன்புள்ள கண்ணனுக்கு,

கண்ணா! நீ நலமா? இவ்வருடப் பள்ளி ஆண்டு விழாவில் நடைப்பெற்ற கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்றதை அறிந்த போது மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். உனது கட்டுரை வெறும் ஏட்டுச் சுரைக்காயாக இருக்காமல் அனுபவ அறிவாக இருந்ததையும் அறிந்தேன். மிக்க மகிழ்ச்சி. இனியும் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பரிசுகள் பல பெற்று பெற்றோருக்கும் உனது பள்ளிக்கும் பெருமை சேர்க்க வேண்டும். உனக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
உன் உயிர்த்தோழன்,
கபின்ராஜ்

**பள்ளியிலுள்ள தகவல் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்திக் கீழே கொடுக்கப்படுள்ள சுற்றுலா தலங்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்துத் தொகுப்பாக வெளியிடுங்கள்.**

- கன்னியாகுமரி.
- மலம்புழை.

google → சுற்றுலா தலங்கள் → கன்னியாகுமரி

google → மலம்புழை

பள்ளி, கணினி ஆய்வகத்திலுள்ள மடிக்கணினியைப் பயன்படுத்தி இணையத்தின் உதவியுடன் தகவல்களைத் திரட்டக் கூறவும்.

## ஊனம் ஒரு தடையல்ல

### செயல்பாடுகள்

**பொருள் கண்டறிதல்.**

நூல் – புத்தகம்
இமையவர் – தேவர்கள்

அகராதியைப் பார்த்துப் பொருள் கண்டறியக் கூறவும்.

**பிரித்து எழுதுதல்.**

காலில்லாதார் – கால் = இல்லாதார்
கண்ணில்லார் – கண் + இல்லார்
நாவில்லார் – நா + இல்லார்
பல்லில்லார் – பல் + இல்லார்
நூலில்லார் – நூல் + இல்லார்

**இறைவனுக்கு விருப்பமானவர் யார்? என்று கணிமேதாவியார் கூறுகிறார்?**

கால் இழந்தோர், கண் பார்வையற்றோர், வாய் பேசாதவர், தனக்குத் துணையாக யாரும் இல்லாதவர், சிறந்த நூலறிவு இல்லாதவர் ஆகியோருக்கு உணவு கொடுத்தவர் தேவர்களால் மிகவும் விரும்பத்தகவர் ஆவர்.

**எதிர்ச்சொல்**

- இல்லை x உண்டு
- மகிழ்ச்சி x துக்கம்
- போற்றுதல் x தூற்றுதல்
- கடை x முதல்

**வாசிப்போம்**

- செய்யுளை நன்றாக வாசித்து, கலந்துரையாடுங்கள். செய்யுளின் மையக்கருத்தைக் குறிப்பாக எழுதுங்கள். செய்யுளை மாணவர்களே வாசித்துப் பொருள் அறிந்து குறிப்பாக எழுதக் கூறவும்.

**எட்டுத்தொகை நூல்கள் எவை?**

**நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல்.**

## சிகரம் தொட்ட அருணிமா சின்ஹா

**வாசிப்போம் விடையளிப்போம்.**

பாடப்பகுதியை வாசித்து மாணவர்களிடம் விடையைக் கண்டறியக் கூறவும் வாசிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கவும்.

- **மாரியப்பன் தங்கவேலுவைப் பாராட்டிக் கடிதம் எழுதுதல்.**

  முன் பாடங்களில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்தி எழுதவும்.

### மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வு

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

- இழந்த சொர்க்கம் என்ற நூலை எழுதியவர் மில்டன் .
- தில்லைக் கலம்பகம் என்பது ஒரு வகை சிற்றிலக்கியம்.
- கண்பார்வையற்றவர்களுக்கான எழுத்து முறை பிரெய்லி.

### சிறுகுறிப்பு எழுதுங்கள்.

**பிரெய்லிமுறை.**

புற்றெழுத்து அல்லது பிரெய்லி எழுத்து என்ற வடிவம் 1821–இல் பார்வையற்றோருக்குப் படிக்க உதவும் வகையில் லூயி பிரெயில் என்பவரால் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு பிரெய்லி எழுத்தும் ஆறு புள்ளிகள் கொண்ட செவ்வகக்கலம் ஆகும்.

விரல் நுனிகளால் தொட்டுணர்ந்து ஒரு சொல்லையோ, எழுத்தையோ, வாசித்தறியும் முறை பிரெய்லி முறை ஆகும். மாறுபடாத ஒரு குறிப்பிட்ட நீள அகலத்துக்குள் ஒழுங்காக அமையும் ஆறு புடைப்புப் புள்ளிகளால் ஆனதாகும்.

| அ | ஆ | இ |
|---|---|---|
| ● ○ | ○ ● | ○ ● |
| ○ ○ | ○ ● | ● ○ |
| ○ ○ | ● ○ | ○ ○ |

இவைப் பிரெய்லி எழுத்தின் சில மாதிரிகள்.

நூலகப் புத்தகங்கள் இணையம் இவற்றின் உதவியோடு தகவல்களைத் திரட்டிக் குறிப்பு எழுதவும்.

- **சைகைமொழி.**

  நூலகத்திலுள்ள புத்தகங்கள், இணையம் இவற்றின் உதவியோடு தகவல்களைத் திரட்டி மாணவர்கள் சுயமாக எழுதவும். ஆசிரியர் உதவவும்.

## முகவரி தேடும் கிராமங்கள்

**பாடலை மெட்டமைத்துப் பாடுதல்.**

முன் அலகில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் செயல்பாட்டைச் செய்யவும்.

**பாடப்பகுதியில் உள்ளது போன்று முன்பு இருந்த கிராமத்தின் படத்தைக் கற்பனையில் வரைதல்.**

- ஒவ்வொரு மாணவர்களும் சுயமாக வரையவும்.
- ஆசிரியர் சில கிராமங்களின் மாதிரிப் படங்களைக் காண்பிக்கலாம்.

**பண்டைய கிராமத்தை இன்றைய கிராமத்துடன் ஒப்பிட்டு கலந்துரையாடல் நடத்தி, அட்டவணைப்படுத்திக் குறிப்பு எழுதுதல்.**

- கவிதையை ஓரிருமுறை நன்றாக வாசிக்கச் செய்யவும்.
- மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக அட்டவணைப்டுத்தலாம்.
- எழுதியதை வாசிக்கவும்.
- விடுபட்டவற்றை இணைத்துக் குறிப்பை மேம்படுத்தவும்.

**ஆசிரியர் குறிப்பு தயாரித்தல்.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | வைரமுத்து |
| தந்தை | : | இராமசாமி |
| தாய் | : | அங்கம்மாள் |
| பிறப்பு | : | 1 9 5 3 ஜூலை 1 3 |
| பிறந்த ஊர் | : | மெட்டூர் (வடுகப்பட்டி) தேனி மாவட்டம் |
| மனைவி | : | பொன்மணி |
| படைப்புகள் | : | கருவாச்சி காவியம், கள்ளிக்காட்டு இதிகாசம், மூன்றாம் உலகப்போர் |
| பட்டங்கள் | : | சாதனா சம்மான், டாக்டர், கவிப்பேரரசு, காப்பியக் கவிஞர், கவி சாம்ராட் ........ |

**உங்கள் வீட்டுச் சுற்றுப்புறம் முன்பிருந்த நிலையிலிருந்து தற்போது எப்படி உள்ளது என்று பெற்றோரிடம் கேட்டறிந்து எழுதுதல்.**

பெற்றோர்களிடம் கேட்டு எழுதவும்.

**பாடலில் உனக்குப் பிடித்த வரி எது? அதற்கான காரணம் என்னவென்று எழுதுதல்.**

பாயும் நதி ஓரத்தில்
பாய் விரித்த மணல் எங்கே?

இந்த வரிகள் எனக்குப் பிடித்துள்ளன. அதாவது பண்டைய காலத்தில் நதியின் அருகாமையிலுள்ள இடங்கள் செழிப்பாகக் காணப்பட்டன. ஆனால் தற்போது மணல் அள்ளப்பட்டு, அவற்றின் ஓரங்கள் இடிந்து நதியின் அழகும் சிறப்பும் அழிந்துவிட்டது.

இதனைக் கவிஞர் பாய் விரித்த மணல் எங்கே எனக் கூறுவதிலிருந்து அறிய முடிகிறது. எனவே இவ்வரிகள் எனக்கு மிகவும் பிடித்துள்ளன.

**பாடலில் உள்ள எதுகை மோனை சொற்களைப் பட்டியலிடுதல்.**

| மோனை | எதுகை |
|---|---|
| சில்லிட்டு | சன்னஞ் |
| சிற்றூர் | தென்னங் |
| ஆடிய | |
| ஆற்றுப்படுக்கை | |
| பாயும்நதி | |
| பாய்விரித்த | |

## முகம் மாறிய கிராமங்கள்

**பாடப்பகுதியை வாசித்து, பண்டைய கிராமங்களின் காட்சிகளைக் கண்டறிந்து எழுதுதல்.**

- ஒவ்வொரு மாணவனும் தனித்தனியாக வாசித்து எழுதவும்.
- எழுதியதை வெளியிடுதல்.
- ஆசிரியர் மாதிரி எழுதி வெளியிடுதல்.
- மேம்படுத்தி எழுதுதல்.

**நீங்கள் வசிக்கும் பகுதியைப் பற்றிய தகவல்களைச் சேகரித்துக் கட்டுரையை எழுதுதல்.**

தகவல்களைச் சேகரித்து தனிநபர் செயல்பாடு நடத்தவும்.

**கட்டுரை எழுதும்போது கவனிக்க வேண்டியவை**

- முன்னுரை – உட்தலைப்புகள், முடிவுரை.
- கருத்துகள் சிறப்பாக வரிசைப்படுத்தப்பட வேண்டும்.
- சுருக்கமும் தெளிவும் இருத்தல் வேண்டும்.
- தகுந்த மொழிநடையை அமைத்தல்.
- சுய கண்ணோட்டத்தில் கருத்தை வெளிப்படுத்துதல்.
- பிழையின்றி எழுதுதல்.

**மாணவர்கள் சுயமாக எழுதிய கட்டுரையை ஆசிரியர் மதிப்பீடு செய்தல்.**

**செயல்முறை**

- எழுத இருக்கும் கருத்தைத் தேர்வு செய்தல்.
- அதற்கான அம்சங்களை இனங்காணல்.
- நூலகம், இணையம் வழி தகவல்களைத் திரட்டுதல்.
- திரட்டிய தகவல்களை ஒழுங்குபடுத்தி எழுதுதல்.
- எழுதியதை வெளியிடுதல்.
- மேம்படுத்துதல்.

**பாடப்பகுதியை நன்றாக வாசித்து நவீனமயமாக்கல் காரணமாகச் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களைக் குறித்து சிறுகுறிப்பு எழுதுதல்.**

**குறிப்பு**

- கருத்துகள் சிறந்த முறையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.
- சுருக்கமாகவும், தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.
- கருத்துக்களின் முழுமை.
- கவர்ச்சிகரமான மொழிநடை.
- பன்முகத்தன்மை வாய்ந்த வாக்கியங்கள்.

- இதன் அடிப்படையில் குறிப்பு எழுதவும்.
- எழுதிய குறிப்பை வெளியிடுதல் .
- ஆசிரியர் அதனை மதிப்பிடுதல்.
- மதிப்பிட்டவற்றை மேம்படுத்துதல்.

**பாடப்பகுதியில் பயன்படுத்தியிருக்கும் வட்டார வழக்குச்சொற்களைக் கண்டறிந்து அவற்றிற்கு இணையான எழுத்து வடிவிலான சொற்களை எழுதுதல்.**

"ஏக்கா மரத்தை வெட்டினே"
மேவரத்து ஊட்டுக்காரங்க
நாலு மாசத்துல
வெக்கை தாங்காமல்

அக்கா ஏன் மரத்தை வெட்டினீர்கள்
மேல்பக்கத்திலுள்ள வீட்டுக்காரர்கள்
நான்கு மாதத்தில்
சூடு தாங்காமல்

மாணவர்கள் சுயமாக வாசித்து வட்டார வழக்குச் சொற்களைக் கண்டறிய உதவவும். கண்டறிந்த சொற்களுக்கு இணையான எழுத்து வடிவிலான சொற்களை எழுதவும். எழுதி வெளியிட்டதை ஆசிரியர் மதிப்பிடுதல்.

**பாடப்பகுதியில் வரும் கதாபாத்திரங்களைப் பயன்படுத்தி உரையாடல் ஒன்றைத் தயாரியுங்கள்.**

உரையாடல் (மாதிரி)

தம்பி : அக்கா! ஏன் மரத்தை வெட்டினீர்கள்.

அக்கா : மேல் வீட்டுக்காரர்களின் டி.வி. டிஸ்சுலே
மரக்கிளை இடிக்கிறது என்பதால் வெட்டினேன்.

தம்பி : மின் விசிறியும் ஓடவில்லையே.

அக்கா : கரண்ட் அடிக்கடி போவுதப்பா.

தம்பி : .........................................................

அக்கா : .........................................................

**பண்டைய காலத்தில் இருந்ததைப் போன்று பசுமையான கிராமப்பகுதி அமைவதற்குத் தேவையானவை எவை? உங்களது கருத்துகளை எழுதுதல்.**

- மாணவர்களைக் குழுவாகப் பிரித்தல்.

- கலந்துரையாடல் நடத்துதல்.
- கருத்துகளை எழுதுதல்.
- வெளியிடல்.
- ஆசிரியர் அவற்றை மேம்படுத்துதல்.

## குறிப்பு எழுதுதல்

**ரிக் வண்டிகள்**

மாதம் மும்மாரி பொழிய வேண்டிய மழை மாறி மாறி பெய்வதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதோடு, நீர்நிலைகள் வறண்டு காணப்படுகின்றன.

இக்கட்டான இக்காலகட்டத்தில் விவசாயத்துக்குப் பெரிதும் கைகொடுக்கும் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பயன்படும் வண்டிகளே ரிக் வண்டிகள்.

நிலத்துக்கடியில் பாதாளத்தில் இருக்கும் தண்ணீரை வெளிக் கொண்டுவர பயன்படுத்தும் போர்வெல் இயந்திரங்களை ரிக்வண்டிகள் என்கிறோம். வறட்சி காரணமாகப் பெரும்பாலான விவசாயிகளும் நிலத்தடி நீரையே நம்பியுள்ளனர். 100 அடி முதல் அதிக பட்சமாக 1000 அடிவரை ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்படுகின்றன.

முன் அலகில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பு எழுதுவதற்கான தரநிர்ணயக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பிடவும்.

## அலகு மதிப்பீடு

I. அ. 'எனக்குப் பிடித்த தலைவர்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவதற்கான குறிப்புகளை எழுதவும்.

ஆ. பெருந்தலைவர் என அழைக்கப்படுபவர் யார்?

II. அ. கீழே கொடுக்கப்பட்டுள்ளவையில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் உட்படாதது எது?

திணைமாலை நூற்றைம்பது, புறநானூறு, திருக்குறள், ஆசாரக்கோவை.

ஆ. துணை மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்று முதலிடத்தில் வந்த ராமுவைப் பாராட்டி ஒரு கடிதம் எழுதவும்.

III. நீங்கள் கண்ட கிராமத்துக் காட்சிகளை ஒரு சிறு குறிப்பாக எழுதவும்.

IV. நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரு நண்பனைச் சந்திக்கும்போது நீங்களும் உங்கள் நண்பனும் பேசுவதை உரையாடலாக எழுதவும்.

V. 'எங்கள் பள்ளிக்கூடம்' எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதவும்.